போஸ்டு ரி. நெ. 819.

கடவுள் துணை.

# வித்தியாபாநு.

மதுரையில் பிரசுரமாகும்

## ஒரு மாதாந்தத் தமிழ்ப் பத்திரிகை.

கற்க கசடறக் கற்பவை கற்றபின்
நிற்க அதற்குத் தக—திருக்குறள்.

தொகுதி க. } விரோதிகிருது ஹூ ஐப்பசிமீ { பகுதி எ.

பொருளடக்கம்.


| | |
|---|---|
| சுதேசாபிமானம்—பத்திராதிபர் | உ0க |
| இடையனும் கலைஞனும—ம. கோபாலகிருஷ்ணையர். | உ0ரு |
| பிரித்தானியாவைச் சேர்ந்த நாடுகள்—இ மௌனசாமி | உ0கூ |
| சைவம் நாட்டிய தமிழ் மாது—ஐ. சாமிநாத முதலியார் | உகங |
| பஞ்சபூதம்—வி. எஸ். முத்துசாமி ஐயர் | உகஎ |
| முத்ரா ராக்ஷஸம்—R. ஸேதுநாராயண சர்மா B. A. B. L. | உஉக |
| மாலினீ மாதவம்—R. S. நாராயண ஸ்வாமிஐயர் B. A. B. L. | உஉச |
| நாட்டுக்கோட்டை நகரத்தாரும் சபைகளும்—பத்திராதிபர் | உங0 |
| புத்தகக் குறிப்பு—பத்திராதிபர் | உஙஉ |
| சமாசாரக் கொத்து—பத்திராதிபர் | |


மு. ரா. கந்தசாமிக் கவிராயர்—புரொப்ரைட்டர்.

ம. கோபால கிருஷ்ணையர். }
மு. ரா. கந்தசாமிக் கவிராயர், } பத்திராதிபர்

வருஷ சந்தா தபாற்கூலியுடன் ரூ இரண்டுதான்.
மாணுக்கர்கட்கு வருஷசந்தா ரூ 1. தபாற்கூலிவேறு. தனிப்பிரதி அணு 3.
மதுரை விவேகபாநு அச்சியந்திரசாலையிற் பதிப்பிக்கப் பெற்றது.

வித்தியாபார விளம்பரம்.

# இதை நினையுங்கள்.

உங்களுக்கு நவீனமும் நாகரீகமுமான நூதன பாரிஸ் கலர்களில்

அதாவது,

## ரோஜா, கத்திரிப் பச்சை, நீலம், மேகவர்ணம், பவளம், வெளிர்ப்பச்சை, தாமிரம், ஆரஞ்சு.

இந்தக் கலர்களில்

## ரவிக்கை குட்டைகளும், புடவைகளும்

தேவையாயிருந்தால் நீங்கள்

காசியிலுள்ள பட்டு வர்த்தகர்,

## கே. எஸ். முத்தையா அண்டு கம்பேனி

க்குத்தான் எழுதவேண்டும்.

ஏனெனில்,

நம்மவர்களுக்கு பஸந்தான பலவிதமான தினுசுகள் அவர்களிடத்தில் தான் ஜாஸ்தியாக இருக்கின்றன.

அநேக ஸ்திரீகள் தங்களுக்குத்தகுந்த ரவிக்கை தினுசுகளும் புடவை தினுசுகளும் கிடைப்பதைப்பற்றிக் குறிப்பாக இருக்கிறார்கள்.

இந்தக் கம்பெனியார் சப்ளைசெய்யும் தினுசுகள் வெளியூர் ஜனங்களுக்கு நல்ல திருப்தியைக் கொடுக்கமுடியும்.

இவர்களுக்கு வரும் வெளியூர் ஆர்டர்களை மிக கவனத்துடன் கவனித்து அனுப்புவதால் வெளியூரார்களுக்குத் தகுந்த தினுசுகளே அனுப்பப்படுமென்பது திண்ணம்.

| | |
|---|---|
| 42 இஞ்சு அகலம்<br>8 கஜம் நீளம் | புடவை 1க்கு விலை<br>ரூ 25 முதல் ரூ 50 வரை. |
| 42 இஞ்சு அகலம்<br>20 இஞ்சு நீளம் | ரவிக்கை 1-க்கு விலை<br>ரூ 2—8—0 முதல் ரூ 5 வரை |

எங்கள் ஜெனரல் கேட்லாக் இனமாக அனுப்புவோம் எமது சரியான விலாசத்தை மறந்துவிடாதிருக்க பிரார்த்திக்கின்றோம். (விலாசம்)

## கே. எஸ். முத்தையா அண்டு கம்பெனி.

பட்டுப்பீதாம்பர வர்த்தகர், ஸ்ரீகாசி. *Benares City.*

உ

கடவுள் துணை.

# வித்தியாபாநு.

மதுரையில் பிரசுரமாகும்

ஒரு மாதாந்தத் தமிழ்ப் பத்திரிகை.

தொகுதி க. { விரோதிகிருதுஸு ஐப்பசிமீ { பகுதி ௭.

## சுதேசாபிமானம்.

(172-ம் பக்கத்தொடர்ச்சி)

"பாலையாம் பருவத்தேயும் பாலராம் பருவத்தேயும்
காளையாம் பருவத்தேயும் காமுறும் இளமைக்கண்ணும்
மீளவில் மூப்புக்கண்ணும் மிகச்சுகத்துக்கமும் மெய்தி
நாளுமே தாம்வாழ் சொந்த நாட்டினை விரும்பார்யாரே"

எனவும், அவ்வாறு விரும்பாதவனைப் பெரும் பாதகன் எனவே கருதவேண்டுமெனவும், முன்பு கூறினோம்.

*"இவ்வுலகத்துள ஒவ்வொரு மனிதனும்
இன்னோ பின்னோ இறப்பது திண்ணம்.
அவ்வாறு இருக்கவும், எவ்வாறு ஒருவன்
தன் முன்னோர்களின் தகைமையின் பொருட்டும்,
அன்றியும் தன்தேவாலய நிமித்தமும்,

---

* To every man upon this earth
Death cometh soon or late
And how can man die better" etc., —*Horatius.*
(*Macalauy's "Lays of Ancient Rome."*)

அணைத்துத் தனைச்சீ ராட்டி யமர்த்திய
அன்பு சான்ற அன்னையின் பொருட்டும்,
பரிவுட னேமுலைப் பாலூட் டித்தன்
மதலையைப் பேணுநன் மனைவியின் பொருட்டும்
உற்றவர் பொருட்டும் உயிர்விடு வதினும்
உத்தம மரணம் உறுவது கூடும் ?"

"அந்தோ! கேவலம் தன்னலம் கருதிச்செய்து தீரவேண்டிய இவைபோன்ற காரியங்களைச் செய்யாதானா பிறர் நலம்கருதி ஏதும் செய்து விடப் போகிறான்?

"ஏன் பிறந்தான் புவிச் சுமையாய் இருக்கும் இன்னோன்?", என்று அறிஞர்கள் பரிதபித்துக்கூறும் இத்தகையோனையும், இவனை இம்மையிலேயே [illegible] கதியையும் குறித்து ஸர் வால்டர் ஸ்காட் பின் வருமாறு கூறுகிறார்:—

*" 'ஈதென் சொந்த ஊர்: ஈதென் பிறப்பிடம்'
எனத்தன் னுள்ளே எப்போ தாயினும்
சொல்லுதற் கொன்று நல்லுணர் வில்லா
ஒருவ னேனும் உயிருடன் உள்ளனோ?
அந்நிய நாட்டினில் அலைந்துபின் தன்னூர்
நோக்கிக் காலடி போகிய காலையில்
உள்ளம் குளிரா ஒருவனும் உளனோ?
இத்தகை ஒருவன் இருப்பனே ஆயின்,
சென்று 'அவன் யாவன்?' என்று நன்கறிதி.
உயரிய பட்டம் உடையோ னாயினும்,
பெயரால் அவன்மிகப் பெரியவ னாயினும்,
ஆசை விரும்பும் அளவிலா நிதியம்
படைத்தவ னாயினும், பரவசத் துடனெப்
பாணரும் அவன்புகழ் பாடுதல் ஒழிவர்.

---

* Breathes there the man with soul so dead ……
Unwept, unhonoured and unsung.
—*Lay of the Last Minstrel*

தன்னையே யாவுமாய் உன்னும்இப் புன்மையோன்
இடம்பொருள் ஏவல் இவையெலாம் இருந்தும், தான்
இருக்கையி லேசுல் இசையெலாம் இழப்பன்.
இவ்வாறு இருமுறை இறந்துஇப் பதடி,
புலம்புவா ரற்றும் பூஜ்யதை யற்றும
பாடல் பெறுதும் பண்டுதான் தோன்றிய
இழியபுன் புழுதிக்கு இழிந்துசெல் குவனே''

ஆ! ஆ!! இவ்வாறு கூறிய நாற்றிசையும் புகழ் மேற்றிசைக் கவிஞர், பலர் நினைக்கிறபடி ஓர் திங்கவிப்புலவர் மட்டுமே யல்லர். தீர்க்கதரிசியுந்தான் என்றே துணிந்து உரைப்போம்.

உத்தமதேசாபிமானிகளாய் உள்ளவர்கள் 'தமக்கென வாழாப் பிறர்க்குரியாள'ராவர். இன்னோர் சமயம் நேர்ந்துழி தாம் ஆருயிரினும் அதிகமாய் அபிமானித்துள்ள தமது

"பூமியி னருமையும் பொன்னினத ருமையும்
மலை வியின் அருமையும் மக்களின் அருமையும்
உடற்குறு இடுககணும் உறுதக்கலமும்
காலத் தருமையும கருதா ராகி'
'எலலாம் வல்ல இறைவனே'போரன்று
தன்புற வோர்ககுத் துணை நின்ற உதவி'த்
தன்னுயிர் 'போல மன்னுயிர் புரக்கும்
மன்னவன் பொருட்டும், மனமகிழ் வுடனே
பொதுநலத் திறத்தும், புகழ்த் தரும்நிதம்
உயிரைக் கொடுத்தும் ஊழியம் செய்வர்''

இதைப் படிக்கும் போதே சரித்திர ஆராய்ச்சி யுள்ளோர்க்கு உரோமாபுரியின் ஆதிநிலைமை ஞாபகத்திற்கு வாராமற்போகாது. முன்னாளெய்ம் மூதூர்புரி முழுமாதவ முளையாய்''த் தோன்றிய புரூட்டஸ், ஹொரேஷியஸ், லார்ஷியஸ், ஹெர்மீனியஸ், மியூஷியஸ், முதலியோரை அவர்கள் நினையாமல் இருக்க முடியாது அன்றியும், ஸ்பார்ட சிம்ஹமாகிய லியோனிடாஸ், ஸ்காட்லண்டின் மீட்சி தேடிய உவில்லியம் வாலெஸ், இட்டலிக்கு விமோசனமளித்த

காரிபால்டி, அமெரிக்காவிலுள்ள ஐக்கியமாகாணங்களின் சுயாதீனத்தை நிலை நாட்டிய ஜார்ஜ்வாஷிங்டன், ஸ்விட்ஸர்லண்ட் ஸ்வாதந்தரிய முறப்புரிந்த உவில்லியம் டேல் முதலியோர்களையும் அவர்கள் மறக்கமுடியாது. நம் தேசத்திலும், அபிமானத்தில் இவர்களினும் ஒரு சிறிதும் தாழாத உத்தம வீரர்கள் விளங்கினர் என்பது புறநானூறு முதலிய நூல்களைப் படித்தோர் அறிவர். நிற்க.

இவ்வபிமானம் மிதமாக இருக்கும் மட்டும் தான், தேசத்திற்கும் தேசத்தார்க்கும் க்ஷேமம். அஃதளவுக்கு மிஞ்சிப் போய்விடுமாயின் போலி அபிமானமாகவே முடியும். அதனால் விளையும் அனர்த்தங்கள் அநந்தமாகும்: மிதமிஞ்சிய அபிமானமானது ஒரு தேசத்தாரைத் தம்மிடத்துள்ள குற்றங்குறைகளைக் கண்டறிந்து கொள்ளும் ஆற்றல் இல்லாராக்கி, உக்கம நெறியிலோ, யோக்கியதையிலோ தமக்கு மிஞ்சினவர் எவருமிலை யெனவும், தாம் செய்யும் எந்தக் காரியமும் சரியானது எனவும், கருதச்செய்யும். அன்றியும் அது அந்நிய நாட்டாரை அக்கிரமக்காரர்கள் என்று அகாரணமாய் அருவருத்து இகழ்வதற்கும், தன்னையே கருதி ஆதரவற்ற அந்நிய நாடுகளை அநாவசியமாகவும் அநீதமாகவும் வருத்தவும் "நினைப்பின்றித் தாமிருந்த கோடு குறைத்துவிடல்"போல தமக்கே ஓர் பெருந்துணை நின்று துணைசெய்யும் பேரரசுகளை, அவை கவலையீனமாய் இருக்கும் காலம் பார்த்துக் கவிழ்க்க எத்தனிக்கவும் காரணமாகும். யுத்தமென்பது ஓர் பிரமாதக் கேடு என்பதையும் மறக்கச்செய்து அந்நிய நாடுகளுடன் அமர் புரிபவும் இது தூண்டும். "நாடெங்கும் வாழக கேடொன்றுமில்லை" என்று எண்ணித் தன்னலம்போல் பிறர்நலம் கருதுவதே உண்மைத் தேசாபிமானமாகும்.

இத்தகைய மெய்யபிமானம் இருக்கும் வரையே ஒரு நாடு ஓங்கிச் செழிக்கும் என்பதற்கும், துவேஷ புத்தியும் பொறாமையும் கூடிய போலியபிமானம் கொண்ட மாத்திரத்திலேயே அதற்கு அழிவுகாலம் சமீபிக்கும் என்பதற்கும், அடுத்த சஞ்சிகையில் ஆதேன்ஸ் நகரையே உதாரணமாகக் காட்டுவோம்.

(இன்னும் வரும்.)

பத்திராதிபர்.

# பிரித்தானியாவைச் சார்ந்த நாடுகள்.

காருண்ணியந்தங்கிய பிரித்தானிய ஆட்சியின் கீழுள்ள தேசங்களை மூன்றுவகுப்பாகப் பிரிக்கலாம். அவையாவன: *சுயராஜ்ய தத்துவமுள்ள குடியேற்ற நாடுகள், ¶முடிக்குரிய நாடுகள், †சார்ந்த நாடுகள் என்பவைகளே.

சுயராஜ்ய தத்துவமுள்ள குடியேற்ற நாடுகள்:

இவை பிரித்தானிய அரசனால் ஏற்படுத்தப்படும் ஓர் இராசப் பிரதிநிதியை மாத்திரம் பெற்றுக்கொண்டு மற்றும் உள்ள சர்க்கார் விஷயம் முழுவதும் அவ்வந்நாட்டுச் சனங்களாலேயே ஏற்படுத்திக்கொள்ளுந் தரத்தையுடையன. இப்பிரதிநிதிகள் எப்பொழுதும் உயர்தரப்பட்டங்கள் பெற்ற கீர்த்திவாய்ந்த சீமான்களே. உலகப் பிரதிட்டை செய்து, ஹாவாய் தீவிலுள்ளவர்களாற் கொல்லப்பட்ட கூக் (Cook) எனபவராற் கண்டுபிடிக்கப்பட்டுப் பின்னர் இங்கிலாந்து தேசத்திலுள்ள பாரதூரமான குற்றவாளிகளினாற் குடியேறப்பட்டதும் பொன்விளை நாடுமாகிய ஆஸ்திரேலியா தேசமும், பிராஞ்சியரினாற் குடியேற்றப்பட்டுப் பின் வூல்வ் (Wolfe) என்னும் சேனாதிபதியினாற் பிடிக்கப்பட்டதும், உலகத்துள்ள சுத்தசலவாவிகளுள் மிகப் பெரியவைகளை யுடைத்துமாய கானடா தேசமும், டச்சுக்காரரால் குடியேறப்பட்டுச் சொற்ப வருடங்களுக்கு முன் ரா பர்ட்ஸ் தளகர்த்தரால் அங்கிலேயர் வசம் ஆகிய திரான்ஸ்வாலை ஓர் அங்கமாக்கொண்டதும் அதிக விலையேறப்பெற்ற வைரங்களையும் பொன்னையுந் தருஞ் சுரங்கங்களையுடையதுமான இங்கிலீஷ் தென்னாபிரிக்காவும் இவை போன்றனவுமாம்.

முடிக்குரிய நாடுகள்.

இந்நாடுகள் இங்கிலீஷ் அரசினரினாலே நியமிக்கப்பட்ட தேசாதிபதியினாலும் அவரின் கீழுள்ள உத்தியோகத்தினரினாலும் நடத்தப்பட்டு வருகின்றன. இத்தேசங்களொவ்வொன்றிலும்

* Self Governing Colonies ¶ Crown Colonies † Dependencies.

சட்ட நிரூபணசபை, சட்ட நிருவாகசபையென இரு சபைகளுண்டு. இச்சபைகளின் அங்கத்தவர்களிற் சிலர் அத்தேசத்தவர்களாலும், சிலர் தேசாதிபதியினாலும் நியமிக்கப்பட்டு வருகின்றனர். உதாரணமாக, இரத்தின விளைவையும், யானைகளையும், கறுவா, கிராம்பு ஆதிய வாசனைத் திரவியங்களையு முடைய இலங்கையும்,கரும்பும் புகையிலையும் விளையும் ஜமய்க்காவும், கீழாசியாவின் கடல்களிற் பிரயாணஞ் செய்யுங் கப்பல்களுக்கு வாசல் போன்ற சிங்கப்பூரும் இன்னும் இவை போன்றனவுமாம்.

சார்ந்த நாடுகள்:

இவை நமது பரதகண்டமாகிய இந்தியாவைப் போல் பலவகைளாகும். இவற்றில் அடங்கிய பல சுதேச ராஜாங்கங்கள் ஆதரவு பெற்ற நாடுகளாகவே இருக்கும். இவ்வாதரவு பெற்ற நாடுகள் நமது ஆங்கில அரசுக்கு வருடாவருடம் ஓர் தொகைப் பணத்தைத் திறையாகக் கொடுத்துவருகின்றன. பண்டைதொட்டுப் பரம்பரையாகப் பரிபாலனம் பண்ணிவரும் மன்னர்கள்,இங்கிலாந்து அரசனைத் தங்கள் பாதுகாப்பவனாகக் கவனித்து வருகிறார்கள். தென்னிந்தியா முழுவதிலும் அதி விசேஷமான மிருககாட்சிச் சாலையைக் கொண்டதும், "தருமராஜ்யம்" எனப் பெயர்பூண்டதுமான திருவாங்கூர், பொன் சுரங்கத்தைப் பொருந்திய, மைசூர் மகம்மதிய சுதேச அரசாங்கங்களிற் பெரிதாகிய ஐதிராபாத்து, உவமை கூற இடந்தராத பட்டுவஸ்திரங்களைத் தரும் காஷ்மீரம் முதலியவை இவ்வகுப்பைச் சார்ந்தவை. நிற்க,

சமுத்திரங்களினிடை, நடுவே இங்கிலாந்தின் கப்பற் சேனைக்கும் வியாபாரக் கப்பல்களுக்கும் பாதுகாப்புக்காகப் பிடிக்கப்பட்ட அசென்ஷன் மால்டா முதலிய தீவுகள் போர்க்கப்பற் றளகர்த்தத்வத்தின் சொந்தமாகப் பாவிக்கப்படுகின்றன.

ஆஸ்திரேலியா தேசம் ஆறு மாகாணங்களை யுடையதாயிருக்கின்றது. அவையாவன: காலஞ்சென்ற விக்டோரியா பெருமாட்டியாரின் நாமதேயத்தைப் பூண்ட விக்டோரியாப் பிரிவும், பொன் சுரங்கங்களுள்ள "இராணிநாடு" என்னுங் கருத்தடங்கிய குவீன்ஸ்லந்தும், ஆட்டுமயிரக் கம்பளத்துக்குப் பேர்போன

நியூஸௌத்வேல்சும், காங்கரு என்னும் மிருகங்கள் சஞ்சரிக்கும் தெற்கு ஆஸ்திரேலியா, மேற்கு ஆஸ்திரேலியாககளும், வெந்நீரூற்றுக் கிணறுகளையுடைய டாஸ்மேனியாவுமாம். இந்த ஒவ்வொரு பிரிவும் தங்கள் தங்கள் சங்கங்களை யுடையதாயிருக்கின்றது. ஆயினும் முழுக்கண்டத்துக்கு முரிய விஷயங்கள் இராசப் பிரதிநிதியாலும், அவர் கீழுள்ள சபையினாலும் நடத்தப்பட்டு வருகின்றன. தற்காலத்திலே ஆஸ்திரேலியா தேசத்துக்கு வேண்டிய போர்வீரர்களையும் கப்பற்படையையும் கொண்டுசெலுத்தும் பொறுப்பு பிரித்தானியாமேற் சார்ந்ததல்ல. ஆஸ்திரேலியாவில் இடையர்களும், சுரங்க வேலையாட்களும், விவசாயிகளும் ஆகிய வேலையாட்களே அமோகம். ஆனதுபற்றித தற்கால மந்திரியாரும் அவர் கட்சியும் தொழில் முயற்சிக் குரிய விஷயங்களுக்காக உழைத்துவருகிறார்கள்.

இனிக் கானடாவைப் பற்றிப் பேசப்புகின், அதுவும் முன்னர்க் கூறிய ஆஸ்திரேலியாவைப் போலவே பற்பல பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டிருக்கின்றது. இத்தேசத்திலே நவீன கட்சியாரும் புராதனகட்சியாரும் ஆகிய இருசார்பினர் உளர். தற்காலத்திலே சண்டைசச்சரவுகளை யுத்தத்தினாற் தீர்க்காமல் ஹேக்(**Hague**)நகரத்தில் ஸ்தாபிதமாயிருக்கும் பஞ்சாயத்தின் மூலமாய்த் தீர்க்கவேண்டுமென்பதைக் குறித்து ஓர் வாக்குவாதம் உண்டாயது நவீனகட்சித் தலைவராகிய லோரியர் Laurier) என்னும் மந்திரியார் ஐக்கிய மாகாணப் பிரஜாதிபதியுடன் உடன்படிக்கை செய்துகொள்ள ஆயத்தமாயிருந்தார். ஆனாற் பிராஞ்சுக்காரரை அதிக அங்கத்தினராய்க் கொண்ட புராதன கட்சியாருககு இது விருப்பமில்லை. அவர்கள் நவீன கட்சியாரிலும் பார்க்க அதிக அங்கத்தினரைச சங்கத்திற் கொண்டபடியால் அவர்கள் கோரிக்கையே ஈடேறிற்று.

எங்கள் இந்தியசகோதரர்கள் அதிக கஷ்ட நிஷ்டூரங்கள் படும் தென் ஆபிரிகாவானது இங்கிலாந்திலிருந்து அனுப்பப்படும ஓர் பட்டவர்த்தனரைத் தலையாகக் கொண்டிருக்கின்றது. அங்கிலேயர்கள், பிரித்தானியர்களும் இந்தியர்களும் படும கஷ்டங்களுக்காகவும், பொன் வைரங்களிற் கொண்ட பேராவாவாலும்,

உலாந்தியரின் சந்ததியாராகும் போவர் (Boers) களுடன் யுத்தம் செய்தது இதை வாசிப்போர்களின் மனதிற் படிந்துகிடக்கும். சண்டை முடிந்து சமாதானம் ஏற்பட்டும் இந்தியர்களின் கஷ்ட நஷ்டங்கள் மட்டும் ஒழியவில்லையே!

முடிக்குரிய நாடுகளுட் பிரதானமான இலங்கை, இங்கிலாந்திலிருந்து நியமிக்கப்படும் ஓர் தேசாதிபதியால் ஆளப்பட்டு வருகின்றது: இவர் இங்கிலாந்திலுள்ள அரசின ராஜமா விகிதர் சட்டங்களைப் பிரகாரமே நடக்கவேண்டும். இவர் சட்ட நிரூபண சங்கத்திலுள்ள அங்கத்தவர்களின் அபிப்பிராயத்தை யறியவேண்டும். ஆனால் அவர்களின் அபிப்பிராயப்படியே நடந்து தீரவேண்டுமென்றில்லை. சட்ட நிறைவேற்றச் சங்கமானது இராசமா விகிதர் இராசாங்க நியாய துரந்தராதிபதி, இலங்கை இராணுவ கர்த்தர், பொக்கிஷாதிபதி, பகிரங்க வேலைக கர்த்தா முதலிய இவர்களை அங்கத்தவர்களாகக் கொண்டிருக்கிறது.

சார்ந்த நாடுகளில் ஒன்றாகிய இந்தியாவிலுள்ள, திறை கொடுத்தாளும் தேசங்களிலே பிரித்தானிய அரசாட்சியார் தங்கள் பிரதிநிதிகளை இவ்வரசர்களுக்கு "ரெஸிடெண்டு"களாக அனுப்புகின்றார்கள். இவ்வரசர்கள் அனனிய தேசத்தவருடன் உடன்படிக்கை செய்யவும், யுத்தம் நடத்தவும அல்லது சமாதானமாகவும் இந்திய கவர்ன்மெண்டாரின் உத்திரவில்லாமற கூடாது. இவ்வரசர்கள் புத்திரப்பேறில்லா திருந்தாற் சுவீகார புத்திரர்களுக்குத் தங்கள் இராச்சியத்தைக கொடுகக இயலும். ஆனால் இப்புத்திரர்கள் இந்திய கவர்னமெண்டாரின சம்மதத்தோடேயே தெரிந்தெடுசகப்பட வேணடும். ஒரு அரசன் தக்க தத்து புத்திரனைத் தெரியாமலும் நியமியாமலும் சந்ததியின்றியும் இறந்தால் அல்லது வேறு இராச்சியத்துடன் உடன்படிக்கை செய்தால், அவ்வரசனின் தேசம் பிரிட்டிஷ் இந்தியஇராச்சியத்துக்குச் சேரபோய்விடும்.

இ. மௌனசாமி.

*சாக்கிரட்டீஸோ? *தல்லியினுடைய
நுட்பக் கருத்தெலாம் நுழைந்துகண் டனையோ?
யூக முள்ள *யூலிஸிஸ் போன்று
சிறிதுமுன் பறியாச் சீமைகள் தோறும்
விதிமோ சத்தால் விடுக்கப் பெற்று
மார்க்கம் [7]ஒரீஇப் பல மாநகர் போந்து
நாநா மாக்களின் நடை, உடை, பாவனை,
விதி, அறிந் தனையோ? விளம்புதி." என்ன,
வினயத் துடனே விளம்பினன் இடையன்:—
கல்வித் [8]துறையை யான் கண்டல னேஅலன்.
மானிடர் இயல்பும் மற்றவர் நியமமும்
வித்தையும் அறியயான் வேற்றிடம் செல இலை.
நுட்பம் [9]ஆய் குநர்தம் கட்புலன் களையும்
மாரீ சம்பயில் மானிடன் ஏய்ப்பன்.
நம்மை நாமே நன்கறி யோமே
ஆயின், பிறர்குணம் ஆராய் வதனால்
அறிவின் முதிர்ந்தோர் ஆகுவர் எவரே?
அற்பமே ஆயஎன் அறிவும் இயற்கைச்
சிருட்டியில் வடித்துத் திரட்டிய வைதாம்.
ஓதிய ஈதி னின்றே உதித்த என்
[10]மூவா வாழ்வின் முறைமையும் விதியும்.
தீச்செயல் களையான் தீர வெறுத்ததும்
இன்னதி னின்றே என்பதுஉம் அறிக.
தேனீ யுடைய தினசரி உழைப்பே
உலையா முயற்சி உளனுக் கியதெனை.
[11]எண்ணித் துணியும் எறும்பினைக் கண்டும்
பின்னை வேண்டுவ இன்னே தேடாது
இருக்க யாரால் இயலும்? தன்னினம்
தனில்மிக நம்பத் தகும் என்னாயே

---

7. ஒரீஇ-நீங்கி. 8. துறை-பாதை. 9. ஆய்குநர்-ஆராய்பவர்.
10. மூவா-கெடாத. 11. உலையாமுயற்சி-விடாமுயற்சி.

*ஸாக்ரடிஸ், தல்லி, யூலிஸிஸ்—இவர்களது சரித்திரச் சருக்கம் சென்ற மாத "பானு"வில் காண்க.

நன்றி என்னும் நற்சுடரினை என்
உள்ளம் தன்னில் ஒளிரச் செய்தது.
[12]திரேயின் பக்தியும் சிரத்தையும் பார்த்து
விசுவாசத்தொடென் வேலையைச் செய்வேன்.
[13]கபோதத் திருந்து கடிமணக் காதலும்
பத்தினி விரதமும் பண்புறக் கற்றேன்.
குளிர்காற் றுருமே குஞ்சினைத தூய
செட்டையிற் காக்கும் பெட்டைக் கோழியும்
உயரப் பறக்கும் ஒவ்வொரு பறவையும்
பெற்றோர் கடன்னைப் பேணச் செய்தன.
இகழ்ச்சி [14]குறளை அகற்றவேண் டியவும்
பிரகிரு தியினிற் பெற்றனன். அதனால்
மிஞ்சிய கர்வம் மேலுறக் கொண்டே
எவரையும் என்றும் எடுத்தெறிந் துரையேன்.
ஆழ்ந்தசிந் தையதா அபிநயம் செய்யும்
ஆந்தையை [15]இழியா மாந்தரும் உளரோ?
உண்மை யில்லா [16]ஒப்பா சாரக்
கபடியை ஞானியாக் கருதுவர் எவரே?
அதிகப் பேச்சுகள் அனைத்தும்வெற் றுரைகளே.
ஆதலின் என் நா அடக்கி ஆண்டிடுவேன்.
[17]சொற்பொழி வென்னும் [18]சோனையிற் றப்புவோம்:
காகம் கரைதலைக் கருதுவர் எவரே?
[19]சூழ்ச்சி உளங்கொடு துரோகசிந் தையனாய்
அயலான் உரிமையை அபகரியேன் யான்:
கொள்ளைக் குணமே குடிகொண் டிருக்கும்
விலங்குக ளிடத்து வெறுப்புடை யோம்நாம்:
கோநாய் பருந்தும் கொடியவல் லூறும்
அவற்றின் விதிப்பயன் அடைவது சரியே.

---

12. திரே-இடையன் நாயின்பெயர். 13 கபோதம்-புறா.
14. குறளை-கோட்சொல்லல். 15. இழியா-கேவலமாய்ப்பேசாத.
16. ஒப்பாசார-வெளிவேஷ. 17. சொற்பொழிவு-சொன்மாரி.
18. சோனை-விடாமழை. 19. சூழ்ச்சி-உபாயம்.

பாம்பைத் தேரையைப் பார்த்தமாத் திரத்தில்
உளம்வெருப் புறுவது உண்மையில் நியாயமே.
[20]வன்கண் குறளை வன்சொல் தீண் [21]டுழியோ
நாகமா தியவினும் நஞ்சுடையனவாம்.
இவ்விதம் சிருஷ்டியில் ஒவ்வொரு பொருளும்
சிந்திப் பதற்காம் சிலகுறிப் புடையது
சற்குணம் உடையோர் சற்றும் பயனிலா
அற்பப் பொருளினும் அறநெறி காண்பர்" என்று
இன்னணம் உரைப்ப, இயம்புவன் சகுனன்:—
புகழ்உனக் கியற்கையிற் பொருந்திய தன்மையே.
உண்மை யிலேநீ [22]உரவோன் எனற்கு உன்
உத்தம குணங்களே ஒருதனிச் [23]சான்றும்.
இறுமாப் புறவால் இல்லா விஷயமும்
நூலா சிரியர் [24]நவல்வர் ஆதலின்,
மாயப் பிலுக்குள மானிடர் போன்றே
புத்தகங்களுமே போலித் தன்மைய.
[25]பகுதி விதிகளைப் படிப்பவன் எவனும்
உள்ள படியே உண்மையை ஓர்ந்து
தக்கநன் னெறிகளைத் தானகிரகித் திடுவன்.
பிரகிரு தியினிற் பெற்ற இவ்விதிகள்
பாட சாலைப் பயிற்சியில் வாமலே
மாணிடன் தன்னை மாசறு நடையில்
வல்லோ னாக்கவும் நல்லோ னாக்கவும்
புத்திமா னாக்கவும் போதிய" என்றே.

ம. கோபால கிருஷ்ணையர்,
மதுரை மாணவர் செந்தமிழ்ச்சங்கத்து அக்கிராசனாதிபதி.

---

20. வன்கண்-பொறாமை. 21. உழி-போது.
22. உரவோன்-(ஞானத்தால்) பெரியோன். 23. சான்று-சாட்சி
24. நவல்வர்-சொல்வர். 25. பகுதி-பிரகிருதி.

# சைவம் நாட்டிய தமிழ் மாது.

(176ம் பக்கத் தொடர்ச்சி.)

இவ்வண்ணம் கல்யாணம் நிறைவேறிய பின், வந்தாரை உண்டி முதலிய வுற்றால் உபசரித்து, அடைகாயளித்து விடை கொடுக்க, அவரவர் தத்தம் ஊருக் கேகினர். மருகனும் விடைதர, வென்றனன், கேட்ட வண்ணம் விடைகொடுக்கு முன் சில வார்த்தை பல யோசனையுடன் சொல்வா னாயினன், பொன்னிநாட்டரசன்:—

"சந்தவரை யிற்பிறந்து சங்கமதி லேவளர்ந்த
செந்தமிழ்மக காணிகொண்ட சீராள!—எந்தவத்தால்
வந்த மடமயிலை வாழி பெற மணந்தாய்
நந்துளகர்க் கேசெலுவாய் நன்கு."

இந்தப்பெண் ஏனைய பெண்ணைப்போ லல்லள். உலகத்தில் எந்தப்பெண்ணாலும் புகுந்த குலம் பெருமை யடைகிறதே யன்றிப் பிறந்தகம் பெருமை பெறுகிறதில்லை. இவளால் பிறந்தகம் பெற்ற பெருமை யானறிவேன். நீ அறிவாய். யாரறியார்? புகுந்தகம் பெற்றது யான் சொல்லாமலே விளங்கும். "மனைவி குணியாயிற் கணவன் வளவனே" கொண்டாள் குணமுடையவளாயிற் கொண்டான் சோழனே யாவன் என்பார் உலகர். இவளைக்கொண்ட நீயோ சோழனுக்குப் பலவளமும் அளிக்கும் வளம உடையவ னாயினை. ஆகவே, உன் பெருமைக் கொப்புயர்வின் றாயிற்று. ஆதலால் இவளை உனது இடது கண்ணகப் பாவித்து நடத்திவர வேண்டுகிறேன்." என்று வென்றவனிடத்தில் இருக்கவேண்டிய பயபக்தியோடு சொன்னான்.

இது கேட்ட மணமகன் முகமலர்ச்சியோடு சிரகம்பஞ் செய்யவே பின்னுஞ்சில சொல்லுவானாயினன் மாதுலன்:

"இடக்கண் மட்டும் தந்தேனென்றிராதே. வலக்கண்ணும் தருகிறேன்" என்று மந்திரி குலச்சிறையைப் பிடித்துப் பாண்டியன் கையில் வைத்து,

"கண்ணென்கோ? கண்ணுண் மணியென்கோ? கண்மணியின்
கண்ணுமுயர் பாவையென்கோ? நாட்டுமதை—உண்ணின்று
இயக்கு முயிரென்கோ? என்னென்று சொல்லி
வியக்க விடலைதனை வேறு"

என்று புகழ்ந்து பேசினான்.

மருகனும், மாதுலன் சொல்லை மறை மொழியாகக் கொண்டு மனைவியை இடது பக்கத்திலும், மந்திரியை வலதுபக்கத்திலும்

இருத்தி மத்தியில் தானிருந்து தேரை நடாத்தி, இடைவழியை இமைப்பொழுதிற் கடந்து மதுரைப்பதியை அடைந்தான். இச்சமையம் இறைவனை யெதிர்கோடற் குறிப்பாக, எங்கெங்கும் ஆடலும பாடலுமாக இருந்த மதுரைப்பதியை எதற்கு ஒப்பிட்டுச் சொல்வோம்? ஆடலால் மயில் என்போம். பாட்லால் குயில் என்போம். ஆனல் மயிலாடலும் குயில் கூவலும் ஏக காலத்தில் நிகழக்கூடியன அல்லவென்று சற்று யோசிக்கின்றோம். இதுநிற்க.

'வீதியுலாப் போநத தேரைக்கண்டவர், தத்தமக்குத் தோன்றியவாறு பேசிப் புகழ்வாராயினர்: "நமது அரசன் ஊரைவிட்டுப் போனபோது ஒருவனுப் போயினுன்; திரும்பும்போது இருவரைக் கூட இட்டுக்கொண்டு வந்திருக்கிறுன்" என்பார் சிலர். "இவ்விருவரில் ஒருவர் நங்கை; மற்றொருவர் நம்பி" என்றார் சிலர். "இவ்விருவரும் யாரோ அறிகிலேம்" என்றார் பிலர். "நங்கை நம்மரசன் மனைவிதான; நம்பி யாரோ தெரிய இல்லை" என்றார் சிலர். "இதில் என்ன சந்தேகம் இருக்கும்? நேர்மையைப் பார்க்க, நம்பி, நங்கையின் சோதரன் தான்" என்றார் சிலர். "சோதரர் என்றால் கூடவரக்காரணம் என்ன?" என்றார் சிலர், "நங்கைக்குக்குத் துணையாக நம்பி வந்தார்போலும்" என்றார் சிலர். "அவர் யாராயிருந்தாலும் சரி. இத்தகைய நம்பியை எம் ஊருக்கு இட்டுவந்த நங்கையைப் "பெம்மான் அமரர் பெருமான் சிறுமான்கை அம்மானருள்காக்க ஆய்ந்து" என்று எல்லோரும் ஆசிகூறினர். இவ்வண்ணம் கண்டார் கொண்டாட அரசன் வீதிவலம் வந்து கோயினுட்சென்று குணக்கடலைக் கும்பிட்டு அரண்மனையுட் சென்று அகமகிழ்ந் திருந்தான்.

## iii அமணுறவு.

இப்படிச் சுகமாக வாழ்ந்துவருநாளில், நல்மரத்தைக் கெடுக்கப் புல்லுருவி தோன்றுவது போல், இவர்கள் சுகவாழ்வைக் கெடுக்கச் சமண மதம் தலைப்பட்டது. இம்மதத்தை, ஆஸ்திகம் எனபார் சிலர். நாஸ்திகம் என்பார் சிலர். இவர் இத்தகையரென யாம் சொல்லத் தயாராக இல்லை. இவர்கள் கோட்பாட்டைக் கூறுவோம்: இவர் கொல்லா விரதியர். இவர்க்கு உயிர்க்கொலை உடன்பாடன்று. ஆகவே உடலிலும் பல்லிலும் உண்டாகும் கிருமி இறந்து படும் என்றஞ்சி உடையுடுப்பதும் இல்லை; பல் துலக்கு

வதும் இல்லை, தலையில் பேன் பிடிக்காமல், தலைமயிரைப் பறிப்பார்கள். இதனால் தலைப்புண்ணுண்டாகி அதில் கிருமியுஞ் சனிக்க இடமுண்டாகும். தரையில் ஊரும் ஜந்து மிதிபட்டு மாள்வதற்கு அஞ்சிக் காலில் மயிற்பீலி கட்டி நடப்பார்கள். இவர்கள் பொருட்டு ஏராளமான மயில்கள் கொல்லப்படும். ஆதலின் இவர்களிடம் சுத்தமிருக்க இயலாது. கொலைமறுத்தலிற் செய்யும் முயற்சி கொலைக்கே இடங்கொடுத்தது. ஆகவே இவர்கள் சொல்வேறு செயல்வேறு ஆக நிகழ்ந்தது. இவர்களது சமயத்தைக் கூன்பாண்டியனும் மேற்கொண் டொழுகலாயினன். "அரசன் எவ்வழி குடியும் அவ்வழி" என்றபடி, மதுரையிலுள்ளா ரனைவரும் அம்மதத்தைத் தழுவலானார்கள். நமது "மானியார்" "மந்திரியார்" இருவருமே இதற்கு விலக்காய் நின்றார்கள். அரசன் கொள்கை மாறியது கண்டு, கூறுக்குறை கூர்ந்தவர்களாய், யாதுசெய்து தீர்வுறுத்தலாம் என்று எண்ணி எண்ணி, மனம் புண்ணாயிருந்தனர்.

இச்சமையம், "எங்குமுள்ளவனும், யாது மறிபவனும், அன்பர்தூ இடையூற்றுக்கிடையூறாய் இருப்பவனுமான எம்பிரான் திருவருள் ஒரு உருவெடுத்தால் ஒத்து திருஞான சம்பந்தர் சீர்காழியில் திருவவதாரஞ்செய்து, உமையம்மை திருமுலைப்பா லுண்டு, தன் மூன்று வயதில் கண்மூன றுடையானைப்பாடி, பொற்றாளம், முத்துச்சிவிகை முதலிய பரிசுபெற்று சிவத்தல யாத்திரையின்மேல் திருமறைக்காட்டில் எழுந்தருளியுள்ளார். மதுரைத் திருப்பதிக்கும் வாராதிரார்" என்று கேள்வியுற்றுப் பெருமகிழ் வெய்தி நாயனருக்குத் திருமுகம் ஒன்று விடுத்தனர். திருமுக மகிமையேறக் கண்சாததி "மானியார் படுந்துயரை மாற்ற இனனே புறப்படுதும்" எனப் புறப்பட்டார். கலவேபுனையாகப பரவையையும், பிறவியையும் கடக்க கற்ற அப்பர் சுவாமிகள் எழுந்து "அடிகாள்! பொல்லாச் சமணர் இருக்குமிடம் போகவுற்ற நீர், பொலலா நாளில் புறப்படலாகாது. நாட்பார்த்துச் செல்வது நலம்" என்று தடுக்க, நாள்நலமும், கோள்நிலையும் நமமடியார்க்கேன்?" என்று சொல்லி, வேயுறு தோளிபங்கனைப்பாடி, மறைக்காட்டைத்துறந்து, இடைச்சுரம் கடந்து, மதுரையை யடைந்து, திருச்சின்னம் பரிமாற, பல்லாண்டுபாட, முத்துச்சிவிகையின் மீதூர்

ந்து மதுரைத்திருவீதியிற் றிரு உலாப்போந்தருளினார். இச்சமையம் சமணர்குழாங்கூடி ஓடிவந்து, "திருச்சின்னம் ஊதிச்செல்லும்படி செய்த பெருத்த காரியம் யாது? எமக்குச்சொல்லிவிட்டு எடுத்தடி வைக்கவேண்டும்" என்று தடுத்தனர். வாதுக்குச் சமயம் வேறுளது என்று எண்ணினார்போல, "விடு பல்லக்கை" என்று கட்டளையிடச் சிவிகை சென்று கோபுரவாயிலை அடையச் சிவிகையினின்றும் இழிந்து, கோயிலிற்புகுந்து, பிராட்டியையும், பிரானையும், விழுந்து பணிந்து, எழுந்து, நடந்து, பாங்கிலுள்ளவோர் மடத்தில் தங்கியருளினார்.

இஃது இங்ஙனமாக, வழிமறித்த சமணர்கள் விடைகொடாதகன்ற சண்டை மன்னர்மேற் கடுங்கோபங் கொண்டனராய், அரசன்பாற்சென்று "ஹே ராஜ! இன்று எமக்கு வந்தடுத்த இடும்பையை என்னென்று எடுத்துரைப்போம்! பாலறாவாயன் ஒருவன் பல்லக்கிலேறி வீதிவலம் வருகிறான். அவனுக்கு முன்னாகப் பூசாதன பூசிப் பூணாதன பூண்டு, பேசாதன பேசிப் பல்லாயிரவர் பல்லாண்டு கூறிச்செல்லாநின்றனர். அவர்களைக் கண்ணுற்ற யாங்கள் "கண்டமுட்டு" அடைந்தோமாயினோம்" என்று அறிக்கையிட்டனர்.

"அடிகாள்! கண்டமுட்டு உங்களுக்காயின் "கேட்டமுட்டு" எனக்குண்டன்றோ? இதற்கு யாது செய்தால் தீர்வுசெய்யலாம்" என்று அரசன்சொல்ல,

"நிறுத்து பல்லக்கை" என்றால் "செலுத்து பல்லக்கை" என்கிறான், கேட்டால் பதில் கிடையாது. சூழ இருப்பவர்கள் பாழு மூர்க்கர்கள். அவர்களை யடக்க யாராலாகும்?" என்றார்கள்.

"அடிகாள்! நீங்கள் நினைத்தால் அணு மலையாகும்; மலை யணுவாகும். உங்களா லாகாத தொன்றுண்டோ? எப்படியாவது இடையூறு தீருமாறு யோசியுங்கள்" என்று அரசன் சொல்ல,

"ஹே ராஜ! எங்கள் மந்திரபலத்தால் வந்தவர்கள் தங்கியுள்ள மடத்தைக் கொளுத்தி அவர்களைத்தொலைத்து விடுகிறோம். நீ அஞ்சவேண்டாம்" என்று அரசனிடை விடைபெற்றுச் சமண முனிவர்கள் தமதிருப்பை யடைந்தனர். (இன்னும் வரும்.)

ஐ. சாமிநாத முதலியார்.
*Ag. Sub Asst. Inspector of Schools, Tanjore.*

உ

சிவமயம்.

# *பஞ்சபூதம்

—:o:—

"பாஞ்ச பூதிகத் தண்ணிறை பண்பனை
ஆய்ந்து ஆய்ந்து அறிவா லறிந்தபின்
தேயாது தேய்ந்து சிவமல்ல தில்லையென்
றோய்ந்து போனதென் னுள்ளமு மெள்ளவே."

"பஞ்சபூதம்" என்றது பிருதுவி, அப்பு, தேயு, வாயு, ஆகாயம் என்றெண்ணப்பட்ட ஐம்பொருள்களைக் குறிக்கும். அவற்றின் நிறம் முறையே பொன்னிறம், வெண்ணிறம், செந்நிறம், கருநிறம், புகைநிறமுமாம்.

இந்நிறங்கள் அமையும் வரிசையைச் சிறிது நோக்கில், பொன்னிறம் எமதிறைவனாகிய பரமசிவன் கயிலாயத்தோடு எழுந்தருளியிருக்கும் பொன்மலையை ஒக்கும். பின்னர் வெண்ணிறம் பொன்மலைமேல் விளங்கும் வெள்ளிமலையாகிய கைலையங்கிரியை நிகர்க்கும். செந்நிறமானது அவ்வெள்ளிமலையின்மேல் வீற்றிருந்தருள்புரியா நிற்கும் "செக்கர்வான் பொருவுஞ் சடிலராகிய" சிவபிரானைக் காட்டா நிற்கும்; கருநிறமானது, அவரது காளகண்டத்தை உணர்த்தியது போலும்; கடைசியான புகைநிறமானது அன்னாரது "புவனங்கடந்த புரிசடைதன்னை"க் குறித்ததை நிகர்க்கும்:

"பூதங்க ளைந்தாகிப் புலனாகிப் பொருளாகிப்
பேதங்க ளனைத்துமாய்ப் பேதமிலாப் பெருமையனைக்
கேதங்கள் கெடுத்தாண்ட கிளரொளியை மரகதத்தை
வேதங்கள் தொழுதேத்தும் விளங்குதில்லை கண்டேனே"

என்ற திருவாசகத்தும் இவ்வுண்மை புலப்படும்.

இனி பஞ்சபூதத்தின் எழுத்துகளை நோக்குவோம்: பிருதுவி, அப்பு, தேயு, வாயு, ஆகாயம் இவற்றிற்கு முறையே, "ல" "வ" "ர" "ய" "அ" எழுத்தாகும் என்று சொல்லப்பட்டிருக்கிறது. "அ"கரமானது ஆகாயத்தைக் காட்டுதலால் "அகரமுதல வெழுத்

---

* இது மதுரை மாணவர் செந்தமிழ்ச் சங்கத்தின் பத்தாவது வருஷோத்ஸவ காலத்தில் வாசிக்கப் பெற்றது.

தெல்லாம்'' என்றதற்கேற்ப, மற்றைய பூதங்களும் அவ்வாகாயத்தி னிடமிருந்தே தோன்றின வென்பது தோன்று நிற்கும்.

அன்றியும் அவ்வெழுத்துக்கள் உச்சரிக்கப்படும் முறையினா லும் ஓர் பூதத்தினின்று மற்றோர் பூதம் உண்டாகுவ கருத்தையும் உள்ளடங்கியது போலும்.

ஆகாயத்தினிடமாக, வாயுவும், வாயுவினிடம் அனலும், அன லினின்று நீரும், நீரில் நிலமும் தோன்றும்.

இக்காலத்து மேல்நாட்டு சாஸ்திரிகள் மற்றபூதங்களைப்போல் ஆகாயத்தையும் ஓர் பூதமாக அங்கீகரிக்காது போனாலும் அப்படிப் பட்ட ஓர் பூதம் இருக்கத்தான் வேண்டுமென்று துணிகின்றார்கள். கம்பியில்லாத் தந்தி சமாசாரம் நிகழ்வதினாலும், அளவிடப்படாத தூரத்திலுள்ள நக்ஷத்திரங்கள் நம கண்ணிற்படுததாலும் இடை யில் இந்நிகழ்ச்சிகளுக்கு காரணமாய் ஒரு பொருள் இருக்கவேண்டு மென்றும் அதுதான் (Ether) ஆகாயம் என்றும் கூறுவாராயினர்.

ஒலி நிகழ்ச்சிக்கு வாயுவை ஆதாரமாக அவர்கள் சொல்வார்கள். நாமோ ஸ்பரிசத்திற்கு மாத்திரம வாயு வென்றும், ஒலிக்கு ஆகாய மென்றும் கூறுவோம். இன்னும் சில நாட்களுக்குள் இம்மலைவும் அவர்கட்கு நீங்கும்.

நமது சாஸ்திரப்படி ஒலிக்கு ஆதாரமாகிய ஆகாயத்தினின்று வாயு உண்டாகும். வாயுவினின்று தீயுண்டாம். இஃதுண்மை, வாயுவில்லாத விடத்தில் தீப்பற்றாத காரணத்தால விளங்கும். தீயினினறு நீர் உண்டாகும என்பர் நம்மனோர். ஆயினும் மேற்கி த்தியார், நீரானது ஜலவாயு பிராணவாயு இவற்றின் சேர்க்கையால் உண்டாகும் என்பர். அவ்வித சேர்க்கை "தானே அமையுமோ! மற்றெவ்வாற்றால்!" என்றால், தீயினாற்றான். "ஒண்கனல் சுட்டொன் றவிக்கும்" என்று ஆதிகாலததிலேயே நம் பெரியோர்கள் சொல்லி யிருக்கின்றார்கள். ஆதலால் தீதான் நீருக்குக காரணமென்பது உண்மையாகும். நீரினின்று நிலம தோன்றுவது சகஜம.

இப்படி ஐந்துவிதமான பூதங்கள் ஓர் ஆகாயத்தை ஆதாரமாக வுடையன என்றால் ஐந்தும் வெவ்வேறா? ஒன்றா? என்ற வினா

நிகழும். ஐந்து பூதங்களும் உண்மையில் ஒன்றாயினும் அவைகள் நிற்கும் நிலைவேறுபடாமல் வெவ்வேறென யாம் கொள்ளற்கிடம் தரும். அதுவன்றி வேறல்ல. எவ்வாறெனில் மண்ணாகிய பொன்முதலிய வற்றை சலரூபமாகஉருக்கல் கூடும் சலமும் கல்ரூபமாக உறைதல் உண்டு. சலத்தை அனலால் அனல்ரூபமாகிய நீராவியாகவும், மின்சாரத்தினால் இருவித வாயுகளாகவும் செய்தல் கூடும். இவ்வாறு மேலுங்கீழுமாக ஒன்றை மற்றொன்றாக மாற்றக் கூடுமான நிலையுடைத்தானதால் ஓர் பொருளாகிய ஆகாயமே நிலைபேதத்தால் வேறுபட்டதெனக் கொள்ளல் வேண்டும் இதுபற்றியன்றோ திருவண்டப்பகுதியில் "விண்முதல் பூதம் வெளிப்பட வகுத்தோன்" என்றார் மணிவாசகப்பெருமானும்.

ஆகாயத்தில் தனியே ஆகாயமும், வாயுவில் பெரும்பான்மை வாயுவும் சிறுபான்மை ஆகாயமும், அனலில் பெரும்பான்மை அனலும் சிறுபான்மை வாயுவும் ஆகாயமும், அதுபோல நீரிலும் நிலத்திலும் பெரும்பான்மை நீரும் நிலமும சிறுபான்மை மற்றைப்பூதங்களும் காணப்படும்,

இனிவடிவு சொல்லுங்கால், "பிருதுவி நாற்கோணம்: அப்பு அர்த்தசந்திரன்: தேயு முக்கோணம்: வாயு அறுகோணம்: ஆகாயம் வட்டம்:" என்பர்.

இவ்வடிவுகள் ஏற்பட்டதில் ஓர் கிரமம் காணப்பட்டதால் அதையும் இங்குக் குறிக்கலாயிறறு:—

(1) நாற்கோணம், ஒரேவிதமான நான்கு நேர்கோடுகளாலேயே ஆயது. ஆகையால் அது ஒன்றைக்குறிக்கிறது.

(2) அர்த்தசந்திரன், ஒரு நேர்கோடும் ஒரு வளைந்தகோடும் கொண்டது. ஆகவே அது இரண்டைக் குறிக்கிறது.

(3) முக்கோணம் மூன்றைக்குறிக்கிறது.

(4) அறுகோணம், நான்கைக்குறிக்கும். எப்படியெனில அறுகோணத்தைக் கோடுகளால் முக்கோணங்களாக்கில், நான்கு முக்கோணம் தான் உண்டாம்.

(5) ஆகாயம், "வட்டம்" என்றதால் அதில் நடு (Centre) ஒன்று, திக்குகளைககாட்டும் கால்கள் நான்கு ஆக ஐந்து என்று வைத்தாலும் பொருந்தும். இங்கு திசை முகனும் அவன் திகிரியும் 5 ஆதலும் ஒக்கும்.

இப்போது பிருதிவி முதல் 1, 2, 3, 4, 5 என்றெண்ணினேம். அவற்றையே 5, 4, 3, 2, 1 எனவுந் தலைகீழாக எண்ணவும் இடந்தரும.

"பாரிடை ஐந்தாய்ப் பரந்தாய் போற்றி
நீரிடை நானகாய் திகழ்ந்தாய் போற்றி
தீயிடை மூன்றாய்த் திகழ்ந்தாய் போற்றி
வளியிடை யிரண்டாய் மகிழ்ந்தாய் போற்றி
வெளியிடை யொன்றாய் விளைந்தாய் போற்றி"

ஆகையால் பிருதிவியில் சப்த, ஸ்பரிச, ரூப, ரஸ, கந்தம் ஆகிய ஐந்தும், அப்பில் சப்த, ஸ்பரிச, ரூப, ரஸம் ஆகிய நான்கும், தேயுவில்சப்த, ஸ்பரிச, ரூபம் ஆகிய மூன்றும், வாயுவில் சப்த, ஸ்பரிசம் ஆகிய இரண்டும், ஆகாயத்தில் சப்தம் ஒன்றும், காணப்படும்.

இதினின்று யாம் பெறுவது என்னென்றால், சப்தத்தினிடமிருந்து உலகம் தோன்றும் என்பதாம். சிவபிரானது கையிலுள்ள உடுக்கும் இக்கருத்தை இனிது விளக்கும். அன்றியும் தற்காலத்தில் மேலைநாட்டுச்சாஸ்திரிகளும சப்தத்தினலேயே அதியற்புதமானவும், இலககண வழு ஒரு சிறிதுமில்லாதனவுமான பற்பல கட்டிட உருக்கள் (Geometrical figures) அமைவதையும் கண்டுபிடித்திருக்கிறார்கள்.

"Milton's paradise Lost Bk. 1." என்ற புத்தகத்தில் "சாத்தான்" கட்டின ஆகாயமளாவிய அரண்மனையும் சப்தத்தினல் தரை மட்டத்திலிருந்து தானே கிளம்பி அழகு பெற அமைந்ததென்றிருககிறது. இச்செயலை முன்னம் வெறும் பொய் என்றாலும், தற்கால வுணர்சசியினல் அதில் மெய்மை சிறிதேனும் இருக்கக்கூடுமென நினைக்க இடந்தராமற் போகாது. ஈஜிப்ட் (Egypt) தேசத்திலும் இவ்வாறு சப்தத்தினல் கட்டடங்கள் உண்டாயின என்று சொல்வார்கள். இஃது இமமட்டோடு நிற்க.

C. S. முத்துசாமி ஐயர்,
*Hd. Tamil Pandit, Wesleyan Mission High School, Negapatam.*

# முத்ரா ராக்ஷஸம்.

## அங்கம் க.

(ப்ரவேசம: சாணக்யன்.)

சாணக்யன்:—(தலைவிரிகோலமாய்க் கோபாவேசத்துடன் தன் சிகையைக் கைகளால் உருவிககொண்டு) "யான் உயிருடனிருக்கையில் சந்திரகுப்த மகாராஜனை அசைக்க வல்லவன் எவன்? என்ன துணிவு!

8. மத யானையின் இரத்தத்தையுண்டு வெறிகொண்டு நிற்கும் சிம்மத்தின் வாயினின்று செவ்வானம்போல் சிவந்த பற்களை யபகரிக்கவும், இளம்பிறைபோல் விளங்கும் நமது சந்திரகுப்த மகாராஜனின் உயர் பதவியை யபகரிக்கவும் துணிபவன் யாவன்?

9. நந்தவம்சத் (தை யழிக்க உதித்த) துக்குக் காலஸர்ப்பம் போன்றதும், (எனது) கோபாக்நியி னின்றும் கிளம்பும் கரும்புகை போன்றதுமான என் கேசத்தை இன்று யான் கட்ட விரும்புகை கையில் அதை உயிரையும் வெறுத்துத் தடுப்பவன் யாவன்?

10. நந்த குலமெனும் வனத்தை எரிக்கும் தூமகேது போல் ஜ்வலிக்கின்ற என் கோபாக்நியில், விளக்கொளியில் பறந்து நிற்கும் விட்டில் பறவைபோல், தன் வலிமை பிறர் வலிமை யறியாது பாய்ந்து நாசமடையும மூடன் எவன்? சார்ங்கரவ! சார்ங்கரவ !!

(ப்ரவேசம்: சிஷ்யன் சார்ங்கரவன்.)

சார்ங்கரவன்:—"குருச்ரேஷ்ட! ஆக்ஞாபிக்கவேண்டும்."

சாணக்யன்:—"குழந்தாய்! சற்றுக் களைப்பாற விரும்புகிறேன்."

சர்ர்ங்கரவன்:—"குருநாத! இம்முன் மண்டபத்தின்கண் பிரம்பு ஆஸனங்களிருக்கின்றன. தேவரீர் எழுந்தருளவேண்டும்."

சாணக்யன்:—"வத்ஸ! யாம் எடுத்த காரியம் நிறைவேற வேண்டு மென்ற ஆவலால் எப்பொழுதும் நம் மனம் வருந்திக் கொண்டிருக்கின்றதே யொழிய, நமது சிஷ்யர்களை நிந்திக்க நம மனம் செல்ல வில்லை."

(ஆஸனத்தில் உட்காருகின்றான்.)

நந்தவம்சம் அழிந்ததால் அதிக கோபங்கொண்ட 'ராக்ஷஸன்,' தன் பிதா வதமடைந்த கோபத்தால் நந்தராஜ்ய முழுமையும் கைப் பற்றவெண்ணி முயற்செய்யும் பர்வதக புத்திரனை 'மலயகேது' வுடன் சேர்ந்துகொண்டு, மிலேச்சாதிபதியின் பெரும் சேனையால் சூழப்பட்டுச் சந்திரகுப்த மகாராஜன் மேல் படையெடுத்து வருவதாய் எவ்விதமோ நாடெங்கும் ஸமாசாரம் பரவியிருக்கின்றது.

(ஆலோசித்து)

சரி! இருக்கட்டும்! உலகமெலாம் அறியுமாறு, இந் நந்த ராஜ வம்சத்தை யழிப்பதாய் யான் சபதம் செய்தேன்.—அச்சபத மாகிய நதியைத்தடுக்க எவனால் முடிந்தது?—அப்படிப்பட்ட யானே இப்பொழுது இவ்விஷயம் வெளிப்படாது தவிர்க்கவல்லவ னல்லனோ?

11. பகைவரின் மனைவிகளாகிய் திசைகளில் பிரகாசிக்கின்ற முகங்களாகிய சந்திர பிம்பங்களைச் சோகமெனும் புகையால் எப்பொழுதும் மங்கச்செய்துகொண்டும், அவர்களுடைய மந்திரிகளாகிய மரங்களை எனது தந்திரமெனும் பெருங்காற்றால் அடிக்கப்பட்ட மோஹமெனும் தூளியால் மறைத்துக்கொண்டும், தவிரவும், மனங் கலங்கித் தவிக்கும் அந்தணர் முதலான ப்ரஜைகளைத்தவிர, அந் நந்த வம்சத்திலுதித்த யாவரையும் எரித்துக்கொண்டும் இருந்த காட்டுத் தீபோன்ற என் கோபாக்நியானது, இப்பொழுது சமனமுடைவது எரிப்பதற்கு வேறு வஸ்துவில்லாததாலே யொழிய, எரிக்கும் வல்லமைக் குறைவா லன்று.

12. தவிரவும், முன் என்னை உயர்பதவியினின்றும் உதைத்துத் தள்ளுங்கால், சற்றேனும் மனந்தளராத என்னைக் கண்டு, அரசனிடத்துள்ள பயத்தால் தலைகுனிந்து "சீ! சீ!" என்று அரசனை நிந்தித்து வருந்தினவர்கள், இப்பொழுது, மலையுச்சியினின்றும் மத யானையை ஓர் சிம்மம் உருட்டுவதுபோல், ஸிம்ஹாஸனத்தினின்றும் ஸகுடும்பத்துடன் நந்த ராஜனை யான் தள்ளியதைக் கண்ணுற்றிருக்கின்றார்கள்.

இப்பொழுது என் சபதம் நிறைவேறிவிட்டபோதிலும் சந்திர குப்த மஹாராஜனை ரக்ஷிக்கும்பொருட்டு மறுபடி ஆயுதம் தரிக்கின்றேன். இந்த ஆயுதமானது,

13. ஹிருதய் ரோகம்போல் பூமியை வருத்தின நந்த வம்சத்தை யடியோடழித்தது. ஸரஸில் தாமரை நாட்டுவதுபோல் மௌர்ய ராஜனிடத்தில் ராஜ்ய லக்ஷ்மியை ஸ்திரமாய் நாட்டியது. நம் மனதால் ஸங்கல்பித்த நிக்ரஹம் அனுக்ரஹம் என்பவைகளைச் சமமாகப் பங்கிட்டோம். ஒரே காலத்தில் ஒரே செய்கையில், நமது கோபாக்கினியால் நமது பகைவரை வென்றோம், நமது அன்பால் நமது நண்பரை யுயர்பதவியில் நாட்டினோம்!

ஹா! இந்த ராக்ஷஸனை வசப்படுத்தாதவரை, இந் நந்த வம்சத்தை யழித்துத்தான் பயனென்ன? இச் சந்திரகுப்த மகாராஜனை ராஜ்யபதவியில் நாட்டித்தான் பயனென்ன!

(ஆலோசித்து)

ஆஹா! நந்த வம்சத்தில் இந்த ராக்ஷஸன் அதிக அபிமானமுள்ளவனாய் இருக்கின்றான். நந்தவம்சத் துதித்த ஒருவனாவது உயிர்த்திருக்குமளவும், சந்திரகுப்த மகாராஜனுடைய மந்திரியாக அவன் உடன்படான். மேலும் இந்நந்தவம்சத்தை மறுபடி இம்மகத ராஜ்ய பதவியில் நிலைநாட்ட முயற்சி செய்யாதிருப்பானாகில் அவனை நமது கைவசப்படுத்தி விடலாம். இந்த காரணத்தால் [illegible], நந்தவம்சத்தில் பிறந்த ஸித்தார்த்தி யெனபவன் தவமபுரிய வனம் சென்றவனாயினும், பாவம்! அவனையும் கொன்றுவிட்டோம். இப்பொழுது இவன மலயகேதுவுடன் சேர்ந்துகொண்டு நமது ராஜ்யத்தைக் கைப்பற்ற அதிக முயற்சி செய்வதாய்த் தெரியவருகின்றது.

(ஆகாசத்தை நோக்கி)

நல்லது! மந்திரி ராக்ஷஸ! நல்லது! நல்லது! அந்தணரே! நல்லது! நல்லது! பிருஹஸ்பதி போன்ற மந்திரியே! நல்லது! என்ன ஆச்சரியம்!

(இன்னும் வரும்.)

R. வேங்கடநாராயண சர்மா B. A. B. L.

# மாலினீ மாதவம்.

(196-ம் பக்கத்தொடர்ச்சி.)

சிறசில சமயங்கள், தோழி கமலா மூலமாய்க் கடிதம் போக்கு வரவுகள் உண்டு. அவைகளைக் கண்டதும், மாதவன் தன் மெய்க் காதலியை நேரில் கண்டதுபோல அடிக்கடி பார்ப்பதும், கண்களில் ஒத்திக்கொள்ளுவதும், முத்தமிடுவதுமாய் அடிக்கடி ஆனந்த பரவசனாவான். மாலினி யொருத்தி நிமித்தந்தான் மாதவன் ஆங்கு அவ்வளவு துன்பங்களின் மத்தியில் காலங் கடத்தி வந்தான்.

மாலினிக்கும் மணிபுரம் மஹாராஜாவுக்கும் விவாஹ மஹோத்ஸவத்துக்கு வேண்டிய ஏற்பாடுகளெல்லாம் எவ்வளவோ சீக்கிரமாய் நடந்து வருகின்றன.

மாலினி என்ன செய்வாள்! பாவம்! தன் மனத்துள்ளதை மனதாரத் தெரிவித்துச், சமாதான மடையத் தயார் இருக்கின்றாளா?

தினகரன் எவ்வளவோ புத்திமானாயினும், தன் கௌரவத்துக்கேற்ற ஸம்பந்தம் செய்வதிலேயே மனமுடையவன். பாலூர் மஹாராஜாவும் காலதேச வர்த்தமானங்களை யனுசரிப்பதே புத்தித் திறமை யென்று எண்ணி, 'மாலினீ பெண் பேதைமையால் பிதற்றுகின்றாள்' என்று அவள் மனவேதனையை அலட்சியம் செய்துவிட்டு, மணிபுரம் மஹாராஜாவுக்கே தன் புதல்வியை மணம் புரிவிப்பதாய்த் தீர்மானித்துவிட்டார்.

ஸ்திரீகளின் வாழ்வு ஓர் பூங்கொடி போன்றது. தான் பிறந்த விடத்து எவ்வளவோ அன்புடன் வளர்ந்து வந்தாலும், தக்க பருவம் வந்த காலத்தில், தனக்குரிய ஓர் ஆச்ரய விருக்ஷத்தை யடைந்தால், அக்கொடி அதைப் பலவாறு சுற்றிப் புஷ்பித்துத் தானும் மலர்ந்து அம்மரத்தையும் மலரச் செய்வதுபோல, பெண்களும், தங்களுக்குப் பருவம் வந்த காலத்தில், தங்கள் மனதுக் கிசைந்த காதலனைக் காமுறுகின்றார்கள். அவர்கள் இச்சைப்படி யடை

ந்துவிட்டால் தாங்களும் சுகமடைவதல்லது, தங்கள் காதலர் மனதுக்கும் ஓர் இன்ப விளக்குப்போல் விளங்குவார்கள்

சரியான ஆச்ரய விருக்ஷமற்ற பூங்கொடியானது, தரையிலே படர்ந்து, கால்களால் மிதியுண்டு, கொஞ்சமேனும் செழிப்பற்று வாடி வதங்குவது போல, மனதுக்கிசைந்த காதலனை யடையா மங்கையரும, தங்கள் வாழ்நாளெல்லாம் வீண்நாளாயின வென்று மனம நொந்து, உலகத்தையே வெறுத்து வாடுகின்றார்கள். மாலினியின் கதியும் இவ்வாறே முடிந்தது. எவ்வளவோ செல்வவானான மணிபுரம் மஹாராஜனை மணம்புரிய மனம் சகியாதவளாயினும், 'பித்ரு பக்தி'யெனும் பெரும் தர்மத்துக்குக் கட்டுப்பட்ட அம்மாது சிரோமணி "சரி! உங்களிஷ்டம்" என்று சொல்லிவிட்டு, (மனதுக்குள்) "என் தலைவிதி இவ்வளவுதான். அன்று எழுதியவன் அழித்தெழுதப் போகிறானா?" என்று தன்னையே நொந்துகொண்டாள்.

ஆறாவது அத்தியாயம் முற்றிற்று.

---

## அத்தியாயம் 7.

தர்பார் தினமுதல், பல விடங்களிலிருந்தும் அநேக நண்பர்களும், இதர ஜமீன்தார்களும், பல தனவான்களும் மணிபுரம் வந்து நமது மஹாராஜாவைக் கண்டு பரஸ்பரம் மரியாதை கொண்டாடி, சிநேகம் பாராட்டிப் போவதும், சாதாரணமானவர்கள், நமது ஜமீன்தாரவர்கள் பேட்டி பெற்று, அதிசய வஸ்துக்களைக் காணிக்கையாகச் செலுத்தி தயவு சம்பாதித்துச் செல்லுவதும், நானாவித வித்தைக்காரர்கள், வாத்தியக்காரர்கள், ஸங்கீத வித்துவான்கள் முதலான அநேக வித்துவான்கள் தங்கள் தங்கள் அருமையான வித்வத்தை அரங்கேற்றிப் பரிசுபெற்றுச் செல்லுவதும், பல தமிழ் வித்துவான்கள் ஜமீன்தாரவர்கள்மேல் கவிகள் பாடிச் சம்மானம் பெற்றுச் செல்லுவதும் இவ்வாறு மணிபுரத்தில் ஒவ்வொரு தினமும் காலைமுதல் மாலைவரை உத்ஸவமாகவே இருந்தது.

அகண்ணித குணகண, ஸர்வ வித்யா ஸர்வசாஸ்திர ஸர்வகலாபார ங்கத, சதாவதானம், கவிகுஞ்சரம் ஜகந்நாத கவிராயரவர்கள் நமது ஜமீன்தாரவர்கள் சந்திரவம்சத்திலிருந்து ஸாக்ஷாத்தாய் உதித்து இக்கலியுகத்தில், தர்மம், ஸத்தியம் என்பவைகளை ஒருருக்கொண்டு அவதரித்தவர் என்றும், ஜகத்துக்கே ஓர் திலகம் போல், அக்ஷரலக்ஷம் கொடுத்த போஜ மஹாராஜனை மறு அவதாரம் செய்தவரென்றும் ஐம்பத்தாறு தேசத்து மன்னர்களும், அவரது பாதாரவிந்தங்களில் காணிக்கைகள் செலுத்தப்பெற்றவராயும், அம் மன்னவர்கள், நமது ஜமீன்தாரவர்கள் பேட்டிக்கு ஆசார வாசலில் நூற்றுக்கணக்காக காத்துக்கொண்டிருக்கும் அதிசயத்தை அழகாக வியந்தும், வர்ணித்துச், செந்தமிழில் செய்யுட்கள் பாடி நமது ஜமீன்தாரவர்களிடம் சம்மானம் பெற்றும், திருப்தியடையாமல் தன் கவித்திறமையையும் அருமையையும் அறிய வல்லவர் இந்த ஜம்பூத்வீபத்திலேயே இல்லையே யென்று மனம் நொந்து போய்ச் சேர்ந்தார்.

தர்பார் நடந்த மூன்றாம் நாள் மாலையில், நமது ஜமீன்தாரவர்களும், பாலூர் மஹாராஜா அவர்களும், அரண்மனைக்கு அரைமைல் தூரத்திலுள்ள ஓர் அழகிய பங்களாவின் உப்பரிகையில் ஓர் லோபாவில் சாய்ந்துகொண்டு ஆலோசனை செய்துகொண்டிருந்தார்கள். சற்று தூரத்தில் வீரவேடம்பூண்டு, உடைவாள் தரித்துத், தினகரன் அங்கும் இங்கும் சிம்மக்குட்டிபோல் உலாவிக்கொண்டிருந்தான்.

மணிபுரம் ஜமீன்தார்:—"என்ன! அண்ணு! எல்லாம் ஈசன் செயலே! அன்று எழுதினவன் அழித்து எழுதப்போகிறானோ? உங்களுக்குப் 'ப்ரீவீ கௌன்ஸிலில், கேஸ்' நிச்சயமே ஜயிக்கும். அதற்கு ஆக்ஷேபனையேயில்லை. தடையேயில்லை. குட்டிச்சுவரில் முட்டிக்கொள்ள வெள்ளெழுத்தா? அதிற்காகக் குழந்தை கல்யாணத்தை—மாலினிக்கும் வயதாய் விட்டது. சரியான காலத்தில்——"

பாலூர் ஜமீன்தார்:—"அதைப்பற்றி யொன்றும் நான் சொல்லவில்லையே. அந்தக கல்யாணம நடக்கவேண்டியதுதான்——."

மணிபுரம ஜமீன்தார் மனம் சற்று சமாதானமடைய—"ஆ! அதுதான சொன்னேன். வேண்டிய காரியங்களெல்லாம யத்னம்

செய்து அநேகமாய் பூர்த்தியாய்விட்டது. 'சுபஸ்ய சீக்ரம்' என்று யத்தனித்த கார்யம் நிறைவேறவேண்டுமல்லவா?—அதைப்பற்றி-"

பாலூர் ஜமீன்தார்:—விவாஹ விஷயத்தில் ஆக்ஷேபணையே இல்லை. குழந்தை மாலினீயின் விவாஹம் நடக்கவேண்டியது தான்-ஆனால்-"

மணிபுரம் ஜமீன்தார் மறுபடி திடுக்கிட்டு ஒன்றும் சொல்லத் தோன்றாதவராய்த் திகைத்தார். சற்று தூரத்தில், இவைகளையெல்லாம் கவனித்துக்கொண்டு உலாவிக்கொண்டிருந்த தினகரன் திடுக்கிட்டுத் திரும்பி, இவர்களண்டை யோடிவந்து! "என்ன! அண்ணா! இப்படிப் பேசுகிறீர்கள்! விவாஹ விஷயந்தான் தீர்மானமாய்விட்டது. உங்கள் மனதிலிருப்பதென்ன! நாமும் நம் அந்தஸ்துக்குத் தகுந்தபடி நமது ராஜ்யத்தால் விவாஹம்—."

மணிபுரம் ஜமீன்தார்:—(மறுபடி முகமலர்ச்சியுடன்,) "அண்ணா! பார்த்தீர்களா! தாங்கள் இவ்வளவு வித்யாஸம் பாராட்டிவிட்டீர்களே! என் நகர் வேறு தங்கள் நகர் வேறு? எல்லாம் தங்களதே! எப்பொழுது மாலினீக்கு விவாஹம் ஆயிற்றோ அப்பொழுதே இஜ் ஜமீன்தாரி முழுமையும் அவளுடையதே! அவள் ஜமீன்தாரி, தங்களுடையதே. மாலினீக்குச் சேரவேண்டிய நகரிலேயே அவளுக்கு விவாஹம் நடப்பதில கௌரவககுறைவு என்ன இருக்கிறது!" என்று சொல்லிவிட்டு ஏதோ தர்கக சாஸ்திர (logical) ரீதியாய்த் தான் பேசிவிட்டதாக நினைத்துச் சந்தோஷததுடன், தன் பேச்சுத் திறமையை எவ்வளவுவரை, பாலூர் மஹாராஜாவும் தினகரனும் கவனித்து மெச்சுகிறார்கள் என்று அறியும்பொருட்டு அன்னவர்கள் முகங்களை முறையே நிமிர்ந்து பார்த்தார்.

இவர்கள் இவ்வாறு ஸம்பாஷித்துக்கொண்டிருக்கையில் அடைப்பக்காரச் சோணை இவர்களிருந்த அறைக்குள் ப்ரவேசமாய், நமது ஜமீன்தாரை நோக்கிக் கும்பிட்டு, வாய்பொத்தி "மஹாராசா!—தலைவங்க வந்திருக்காங்க,—ஏதோ அவசரமாம்—கட்டாயம் மஹாராசாவைக்கண்டு பேசணுமாம்—" என்று சொன்னான்.

மணிபுரம் ஜமீந்தாரின் உடல் திடீரென்று நடுக்கமுற்றது. 'இவ ளாடா அவன்? பூஜைவேளையிலே கரடியை ஓட்டிவிட்டாப் போலே' என்று முணுமுணுத்துக்கொண்டு, என்ன பதில் சொல்லுவ தென்று தெரியாமல் திகைக்கலானான்.

சோணை சொன்ன வார்த்தைகளையும் அவைகளைக் கேட்டதும் மணிபுரம் ஜமீந்தாரின் முகம் மலர்ச்சி யிழந்து கறுத்ததையும் கண்டு, என்ன விசேஷமிருக்கலாமென்று பாலூர் ஜமீன்தாரும் தினகரனும் சந்தேகிக்க லானார்கள்.

பாலூர் ஜமீன்தார் :—"என்! அவஸர கார்யம்—ராஜாங்க காரி யமிருக்கலாம். அதைப் போய்க் கவனிக்கிறதுதானே! அல்லது நாங்கள் சற்று வெளியே சென்று உத்யானவனத்தில்—மாலைவேளை யானதால்—உலாவித்திரிந்து வருகிறோம். உத்தரவு கொடுங்கள்." என்று சொல்லி ஆஸனத்தைவிட் டெழ ஆரம்பிக்க

மணிபுரம் ஜமீன்தார்:—"இல்லை! இல்லை! சற்று இருங்கள்!" என்று சொல்லித் தடுத்துவிட்டுச் சோணையை நோக்கிப் பதிலுரை க்க ஆரம்பித்தார்.

இதற்குள், அவ்வீப்பரிகைக்கு ஏறக்கூடிய படிவரிசைகளில், 'திட், திட்' என்று காலடிச்சத்தமும், 'கட், கட்' என்று தடிகளின் சத்தமும் கலந்து கலந்து கேட்டன. ஜமீந்தார் உடல் முழுமையும் மின்சார ப்ரயோகமானதுபோல நடுநடுங்கிற்று. உடனே, கார் மேகம்போல் கறுத்துப்படர்ந்த மார்பும், உயர்ந்து பருத்த சரீர மும், உருண்டு திரண்டு முழங்கால்வரை தொங்கும் கைகளும், இடுப்பில் வெற்றிலைப் பையுடன் கட்டிய வேஷ்டியும், கறுத்து, வளைந்து, இருகன்னங்களிலும் செழிப்பாய்ப் படர்ந்து வளர்ந்து முறுக்கிவிடப்பட்ட பயங்கரமான மீசைகளும், வாய் நிறைய அடக் கியுள்ள புகையிலை வெற்றிலைத் தாம்பூலமும், தலை நிறைந்து உயர மாய்க் கட்டப்பட்ட தலைப்பாகையும், உள்ள இருவர் கையில் ஆறடி யுயரமுள்ள தடிபிடித்து, வரும்வழியிலெல்லாம், தாம்பூலத்தைத் துப்பிக்கொண்டு பிரவேசமானார்கள்.

அவர்களைக் கண்டதும் நமது மணிபுரம் ஜமீன்தாரின் 'ஸப்த நாடிகளும் ஒடுங்கிவிட்டன. இன்னசெய்வது, இன்னசொல்லுவது என்று தோன்றாதவராயும், வந்தோரை மரியாதையாய்'வா' என்று கூடச்சொல்ல நாவெழாதவராயும், விழுவிழுத்து அப்படியே 'ஸோபா'வில் சாய்ந்தார்.

"என்ன! இவர்கள் யாதொரு மரியாதையுமில்லாமல் இவ்வளவு தடித்தனமாய் வருகிறார்கள்" என்று பாலூர் மஹாராஜாவும் தினகரனும் அதிசயத்துடன் சந்தேகித்தார்கள். தினகரன் இள மீசை பட படவென்று துடித்தது. அவன் வலக்கை விரல்கள் அவனறியாமலே உடைவாளின் பிடிமீது நாடின.

வந்தவர்கள் கள்ளன் கோட்டைத்தலைவர்கள். திம்மன், பொம்மன், என்ற சகோதரர்கள். அறைக்குள் பிரவேசித்ததும், பரஸ்பரம் யாதொருவிதமான உபசாரமின்றியே, மணிபுரம் ஜமீன்தார் அருகில் போட்டிருந்த காலியான 'ஸோபா'வில் உட்கார்ந்தார்கள்.

மணிபுரம் ஜமீன்தார், சற்று தைரியப்படுத்திக்கொண்டு, பயக்குறிகளுடன் கூடிய தன் வதனத்தை வந்தவர்கள் பேரில் திருப்பிக்கொண்டு, "என்ன! திம்மத்தேவரே! என்ன? நான் சொல்லியனுப்பிக்குமுன் வந்துவிட்டீரே? கொஞ்சமேனும் ஜமீன்தாரென்ற மரியாதை தெரியவேண்டாமோ உமக்கு—?" என்று தீனமான குரலுடன் நடுநடுங்கி வினவ,

பாலூர் மஹாராஜாவும், தினகரனும், இஃதென்ன ஆச்சரியம், வந்த பயல்கள் மரியாதைத் தப்பாய் நடப்பதும், மணிபுரம் ஜமீன்தார் இவ்வளவு பயபக்தியுடன் வினவுவதும், ஏதோ அதிசமாய்த்தான் இருக்கின்றது" என்று திகைத்தார்கள்.

இதற்குள், தலைவர்களிருவரும் 'இடியிடி' யென்று குலுங்கச் சிரித்துக்கொண்டு, தங்கள் தடிகளால் ஓங்கித் தரையில் தட்டவே, வெண்கல வார்ப்புப்போன்ற அடிக்கட்டிடம் முழுதும் 'கிண் கிண்' என்று எதிர் ஒலித்தது.

(இன்னும் வரும்.)

**R. S. நாராயணஸ்வாமி ஐயர், B. A., B. L.**

# நாட்டுக்கோட்டை நகரத்தாரும் சபைகளும்.

1. நிகழும் விரோதிகிருது௵ ஐப்பசி௴ ௰௯உ சோக்க லிங்கம்புத்தூரில் அவ்வூர் நகரத்தார்களாகிய உத்தமகுண சீலர்க ளால் ஸ்தாபிக்கப்பெற்ற ஸ்ரீ மாணிக்கவாசக வித்தியாசாலையின் முதல் வருஷ பூர்த்திக் கொண்டாட்டம் சிறப்புற நடந்தது. ௸, ௸ சபைகளில் சுமார் 300 ஜனங்கட்கு மேற்கூடினார்கள். பல அரு மையான தமிழ்ப் பிரசங்கங்கள் நடந்தன அக்கலாசாலை மாணாக் கர்கள் பலர் இனிமையாகப் பிரசங்கித்தனர். அவைகள் இனி கார்த்திகை௴ ப்பாநுவில் விவரமாக வெளியிடப்படுமாதலால் இவண் விரித்திலம். நகரத்தார்களின் பெண்களும் பலர் வந்து கேட்டு மகிழ்ந்தனர். இந்நகரத்தார்களின் ஊக்கம் மிகப்பாராட்டற்பாலதே.

2. அரியக்குடியில் ௰எஉ ஒரு சபை கூடியது. அச்சபை யில் அவ்வூர் வித்துவான ஸ்ரீமத் ஞா. கிருஷ்ணமாசாரியாரவர்கள் அக்கிராசனம் வகித்தனர். அக்கிராசனர் முகவுரை முடிந்த பின் னர் ஸ்ரீ வேதாந்தாசாரியாரவர்கள், ஸ்ரீ திருமலாசாரியாரவர்கள், ஸ்ரீ ஸ்ரீநிவாசய்யங்காரவர்கள், ஸ்ரீ சுந்தரேசுவர ஐயரவர்கள், ஸ்ரீ மு. ரா. கந்தசாமிக்கவிராயரவர்கள், ஸ்ரீ மு. கதிரேசச்செட்டியா ரவர்கள், ஸ்ரீ தெ. அரு. சித. ராமசாமிச்செட்டியாரவர்கள், ஸ்ரீ மு. ரா. சோமசுந்தரஞ் செட்டியாரவர்கள், ஸ்ரீ திரு. இராமசாமியய்யங் காரவர்கள் முதலிய பல வித்துவான்கள் இனிமையாகப் பிரசங்கித் தார்கள். ஸ்ரீ சா. கி. ரெ. இலக்குமணச் செட்டியாரவர்கள் எழுதிய செல்வச்செருக்கு என்ற வியாசம் படிக்கப்பட்டது. நகரத்தார் கள் பலரும் வியாபாரிகளும் மற்றும் பல அபிமானிகளும் கூடி யிருந்து மகிழ்ந்தார்கள்.

3. காரைக்குடி ஸ்ரீ சா. லெ. செட்டியப்ப செட்டியாரவர்கள் மாளிகையில் ௰அஉ மாலை ஒரு சபை கூடியது. மதுரை வித்வான் ஸ்ரீ சுந்தரேசுவர ஐயரவர்கள் "கம்பராமாயணப் பிரசங்கம்" வெகு இனிமையாக நடத்தினார்கள். பிரசங்க முடிவில் மதுரை ஸ்ரீ மு. ரா. கந்தசாமிக்கவிராயர் அவர்கள் அடியில் வருங் கவியைக் கூறிப் பொருள் விரித்தார்கள். அக்கவிவருமாறு:—

இயற்கையறி விணுமிகுந்த சாதனெனுஞ் செட்டியப்ப னின்முன் மைந்தன்
நயச்சுகுண மவிராம சாமிதிரு மங்கல்புதுமனை நன்னு ளின்னுள்
மயக்கமுறு நிறைச்சிதை கதைச்சுவையச சுதைகுணத்தினை வகுர்ந்து வாழப
புயற்குநிகர் சுந்தரே சயயரிவை புறவினிது பொழிதல் கன்றே.

எனபகாம். இதன்பின் மகிபாலன்பட்டி வித்துவான் ஸ்ரீ மு. கதிரேசசெட்டியாரவர்கள் ஐயரவர்கள் பிரசங்கத்தையும் கவிராய ரவர்கள் பாட்டையும் வியந்து பேசினார்கள் சபையார் யாவரும் மிகவும் மகிழ்ந்தனர்.

4. கண்டனூர் ஸ்ரீமாந். தெ. அரு. சித. ராமசாமி செட்டியாரவர்கள் வேண்டுகோளின்படி மேற்படி கண்டனூரில் ஷெயார் பங்களாவில் ஒரு பெருஞ் சபை கூடியது. அச்சபையில் அவ்வூரில் வசிக்கும் வடமொழி வித்துவான் ஸ்ரீமத். லாலுகுடிப் பெரிய சாஸ்திரிகள் அக்கிராசனத் தமர்ந்தார்கள். மதுரை வித்துவான் ஸ்ரீமத். சுந்தரேசுவர ஐயரவர்கள் ஒழுக்கத்தைப்பற்றியும், வித்தியாபானுப் பத்திராதிபர் ஸ்ரீமத். மு. ரா. கந்தசாமிக்கவிராயரவர்கள் செய்ந்நன்றியறிதலைப்பற்றியும், மகிபாலன்பட்டி வித்துவான் ஸ்ரீமத் மு. கதிரேசச் செட்டியாரவர்கள் கல்வியின் பயனைப்பற்றியும் மிகவும் இனிமையாகப் பிரசங்கித்தார்கள். செந்தமிழ் வளர்க்குஞ் சிந்தை மாண்பினராகிய ஸ்ரீமத். தெ. அரு. சித. ராமசாமி செட்டியாரவர்களும் ஸ்ரீமத். மு. ரா. சோமசுந்தரஞ் செட்டியாரவர்களும் 'விருந்தோம்பல்' முதலிய நல்விஷயங்களைப்பற்றி நன்கு பேசினார்கள். முடிவில் சபாநாயக சாஸ்திரிகள் மேற்கூறிய பிரசங்க விஷயங்களை யெடுத்துக் கூறி நன்கு விளக்கினார்கள். முடிவில் மு. ரா. கந்தசாமிக்கவிராயரவர்கள் சபை வாழ்த்தாக

“ஆர்வமுறத் தேனு அருந்தரா மன்மகிழ்ச்சி
கூர்வகையி னிற்செவிவாய்க் கொள்ளவே—சோர்வில்
தமிழ்ப்பிரசங் கம்பொழியத் தக்கசபை வாழ்க
உமைக்கிறைவன் றண்கருணை யுற்று”

என்னும் வெண்பாவைக்கூறி அதன் கண்ணுள்ள அரும் பொருள்களை விரித்துரைத்தார்கள். சபையார் யாவரும் மிக மகிழ்ந்தார்கள்.

5. மேலைச்சிவபுரி சன்மார்க்க சபை—உ-யனவு மாலை 2 மணிக்கு இச்சபைகூடியது. மதுரை ஸ்ரீமத் சுந்தரேசுவர ஐயரவர்கள் அக்கிராசனம் வகித்தார்கள். ஸ்ரீ வயி. நாக. ராம அ. ராமநாதன் செட்டியாரவர்கள் ''பஞ்சாட்சர மகிமை' யைப்பற்றியும், ஸ்ரீ மு. கதிரேசச் செட்டியாரவர்கள் 'பக்தி' யைப்பற்றியும், ஸ்ரீ திரு. ராமசாமியய்யங்காரவர்கள் 'முயற்சி' யைப்பற்றியும், ஸ்ரீ மு. சிங்கயச் செட்டியாரவர்கள் 'பரோபகார' த்தைப்பற்றியும் மிக அருமையாகப் பிரசங்கித்தார்கள், ஆயிரக்கணக்காகக் கூடியிருந்த நகரத்தார்கள் அனைவரும் பெருமகிழ்ச்சி யடைந்தார்கள். அச்சபையில் ஸ்ரீ மு. கதிரேசச் செட்டியாரவர்களால் எழுதப்பெற்று தேவிகோட்டை ஸ்ரீமாந் மெ. அரு. நா. இராமநாதச் செட்டியாரவர்களால் அச்சிடப்பெற்ற “நாட்டுக்கோட்டை நகரத்தார்களின் சீர்திருத்தம்” என்ற புஸ்தகம் பலர்க்கும் கொடுக்கலாயிற்று. நகரத்தார்கள் இங்ஙனம் அபிமானிப்பதால் தமிழ் மக்கட்கு நற்காலம் வந்த தென்றே நம்புகிறோம்.

பத்திராதிபர்.

## புஸ்தகக்குறிப்பு.

——[:o:]——

**ஏசுகிறிஸ்து என்பவர் ஒழுகிக் காட்டிய ஒழுக்கமுறை நூல்:**—இது ஐந்நூற்றுச் சில்லரை வருஷங்களுக்குமுன், ஐரோப்பாவில் உள்ள இத்தாலியா தேசத்தில் **கேம்பிஸ்** என்னுங் கிராமத்தில் அவதரித்த தாமஸ் என்ற மகாபுருஷரால் லத்தீன் பாஷையில் எழுதப்பட்ட "Imitation of Christ" என்பதன் தமிழ் மொழிபெயர்ப்பாகும். இதனை லோகோபகாரமாக ஆங்கிலத்தினின்றும் தமிழில் மொழிபெயர்த்து உதவியோர் "ஆத்மநாதன்" என்ற புனைபெயராரும் "ஓம் தத் ஸத்" என்று கைச்சாத்திட்டும் "ஸ்ரீவாணிவிலாஸினி" யாதிய பல தமிழ்ப்பத்திரிக்கைகளுக்கும் விஷயதானம் செய்துவந்தாரும், நமது விவேகபாநு அச்சியந்திரசாலையில் பதிப்பிக்கபெறும் "பூர்ணசந்திரோதயம்" என்னும் பத்திரிகையின் அதிபரும், மதுரை பிரமஞான சபையின் ஓர்தனி உயிராகி அதனை நன்கு நடத்திவருவோருமான **ஸ்ரீமத். ப. நாராயணையர்** அவர்கள் ஆவர். இஃதொரு சர்வசமய சமரஸ நூலாகும், ஆக்கியோர் கூறுகிறபடி அதிற் காணும் "கிறிஸது" "ஏசு" என்ற வார்த்தைகளுக்குப்பதிலாக, வாசிப்போர், தத்தமது பெரியோர்களின் ,பெயரைவைத்து வாசிப்பராயின் மதச்செருக்கும் துவேஷ புத்தியும் தொலைந்து சுகப்படுவர் என்பதில் ஐயமில்லை. கிருஸ்தவர்கள் இப்புததகததை உள்ளபடி உணர்வாராகில், சபல புத்தியுள்ளவர்களைத்' தம்மதத்தில் சேர்க்கவேண்டுமென்ற எண்ணத்தையே முற்றும் ஒழித்து நல்வழிபட்டு உய்வார்கள். தேவாரம், திருவாசகம், திருக்குறள், திருமந்திரம் முதலிய மேற்கோள்களுடன் வெளிவந்துள்ளாததலின் நம்மவர்கள் "எப்பொரு யார் யார் வாய்க்கேட்பினும் அப்பொருள் மெய்ப்பொருள் காண்பதறிவு" என்பதைக்கடைப்பிடித்து, அப்புத்தகத்தை அதி ஆவலுடன் பெற்றுப்படித்துப் பயன் பெறுவாருக. எளிய தமிழ் நடையில் எழுதப்பட்டு பளபளப்பான கடிதத்தில் அச்சாகி 114 அதிகாரங்களடங்கிய பக்கங்கள் கொண்ட இவ்வரிய நூலின்விலை ரூபாய் ஒன்றே. வேண்டுவோர் ஸ்ரீமத் நாராயணையர் அவர்களுக்கே எழுதிப் பெற்றுக்கொள்ளலாம்.

பத்திராதிபர்.

## சமாசாரக்கொத்து.

மதுரை அமெரிகன் காலேஜ் போர்டாரின் நன்முயற்சியினால் அக்காலேஜுக்கு 90000 ரூபாய் கிடைத்திருக்கிறதென்று அறிந்து மகிழ்கின்றோம். இதற்கு முன்னமேயே ராக்பெல்லர் என்ற கோடீசுவர மகௌதாரி சுமார் லட்சரூபாய் கொடுத்திருப்பது நமது நேயர்களின் ஞாபகத்திலிருக்கும். இனி அது முதல்தர (First Grade) காலேஜாகிவிடும் என்பதற்கைய

## சமாசாரக்கொத்து.

மே இல்லை. ஆயிரக்கணக்கான மைல்களுக் கப்பாலிருந்தும் அமெரிக்கர்களுக்குத் தம் நாட்டார் செய்து வரும் முயற்சியில் கொண்டுள்ள அபிமானத்தைப் பாருங்கள்! மதுரைக்காலேஜ் சுதேசிகளாலேயே நடைபெற்று வரும் உள்ளூர்க் காலேஜாயிருந்தும் அதனை அபிமானிப்பவர் ஒருவரும் இல்லையே ஈதென்ன பரிதாபம்!

* * *

நமது இராமநாதபுரம் ராஜா முத்துராமலிங்கஸேதுபதியவர்களும் வடகரை ஜமீந்தாராகிய ஆனரபிள் ராவ் பகதூர் V. இராமபத்திராயுகொருவும் டில்லியில் வருகிறமீ நடந்தேறும் மகாராஜா—சக்கரவர்த்தியின் முடிசூட்டுக் கொண்டாட்டத்திற்கு சர்க்கார் விருந்தினராய் அவர்கள் செலவில் அழைக்கப்பட்டிருக்கிறார்கள்.

* * *

நகரியில் இருக்கும் வெஸ்லியன்மிஷன் தர்ம வைத்யசாலைக்குப் பிரசவவேதனையின் நிமித்தம் கொண்டுவரப்பட்ட ஓர் குறத்திக்கு இரண்டு தலைகளும் நான்கு கைகளும் 2 கால்களுமுள்ள ஒரு பெண் சிசு பிறந்தது. அது 3 மணியே ஜீவித்திருந்தது.

* * *

ஜப்பானியர் தம் குடும்பத்தில் மரணம் நேர்ந்தால் கூலிக்கு அழுவோரைக்கொண்டு சகல உத்தரக்கிரியைகளும் செய்துகொள்வது வழக்கமாம். துக்கம் கொண்டாட வேண்டிய பந்துக்கள் இறந்த தினத்திலேயே காப்பிக் கடைகளிற்போய் சந்தோஷ சல்லாபங்களுடன் காபி யருந்துவார்களாம்.

* * *

ஓர் தாசியின் தர்ம சிந்தை:—சேலம் கோதாவரியைப்பற்றிக் கிராமபோன் பாட்டுக்கேட்டவர்களும் அறிந்திருக்கலாம். இவள் சென்றமீ 20உ இறந்தகாலத்தில் தன்சொத்து முழுமையும் தர்மத்திற்கெழுதி வைத்துவிட்டாள். இவள சென்னை சிசு ரக்ஷண சங்கத்திற்கு 5000 ரூபாயும் பச்சையப்பன் கலாசாலைக்கு 4000 ரூபாயும் சென்னை அன்னதான சமாஜத்துக்கு 1000ரூபாயும் சேலம் காலேஜுக்கு 1000ரூபாயும் சேலம் வேதபாடசாலைக்கு 1000ரூபாயும் சேலம் சிவன்கோவில் தெருவுக்காக 4000 ரூபாயும் அவ்வூரில் தரிசனார்த்தமாக வருவோர் தங்கிச்செல்ல ஓர் பிரமாண்ட வீடுதியும் அத்துடன் 600 ரூபாயும் கொடுத்திருக்கிறாள். இவள் ஒருத்தியாகவே 6000 ரூ. வெவ்வேறு கலாசாலைகளுக்குக் கொடுத்திருக்கிறாள். மதுரைக் காலேஜுக்குக் கொடுக்க மதுரையில் மனுஷ்யரைக் காணோமே.

பத்திராதிபர்.

ADVERTISEMENT.

# பட்டு பீதாம்பர கம்பெனி.

| | | |
|---|---|---|
| திருப்தியில்லாததைத் திரும்பப் பெற்றுக்கொள்ளலாம். | ஸ்ரீ காசி. | பட்டு பீதாம்பரக் காட்லாக் இனாமாக அனுப்பப்படும். |

## உருத்திராக்ஷங்கள்! ஜபமாலைகள்!!

பரிசுத்தமானது.

108 உள்ள மாலை 1-க்கு 6அணா முதல் ரூபா 12 வரை. விலை அதிகப்படுவதுபோல் மணிகள் சிறிதாக இருக்கும். 6முகக்கண்டிகள 33உள்ளது; கண்டி 1க்கு ரூபா 1முதல் 10 வரை. 5 முகக்கண்டி 32 உள்ளது; கண்டி 1க்கு அணா 10முதல் ரூபா 10வரை விலை அதிகப்படுவதுபோல், மணிகள் பெரிதாகஇருக்கும். சம்மதமில்லாதவை திரும்பப் பெற்றுக்கொள்ளப்படும்.

## வெண்பட்டு வேஷ்டிகள்.

| முழம் | அகலம் | 1-க்கு | ரூ. | முழம் | அகலம் | 1-க்கு | ரூ. |
|---|---|---|---|---|---|---|---|
| 5 | 2½ | 6முதல் | 8 | 7 | 3 | 10 முதல் | 13 |
| 5 | 3 | 7 | 9 | 8 | 3 | 12 | 15 |
| 6 | 2½ | 8 | 9 | 9 | 3 | 14 | 16 |
| 6 | 3 | 9 | 13 | 10 | 3 | 15 | 18 |

தபால் சார்ஜ் பிரத்தியேகம்.

## பனி! பனி!! பனி!!!

பனிக்கு அடக்கமான சுத்தமான கம்பளி ரோமத்தால் செய்த உறுதியும், மைஸூரும், நேர்த்தியுமான கம்பளிப்போர்வைகள், 6 முழம் நீளம் 3 முழ அகலம், சிவப்புமுதலிய சகல நிறத்திலும் தயாராக இருக்கின்றன. உருப்படி 1-க்கு ரூபா 5—0—0 தபால் செலவு பிரத்தியேகம்.

## காசி வயிரவர் கயிறு.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| முதல் நெம்பர் 100-க்கு | ... | ... | 8 | 0 | 0 |
| 2-வது நெம்பர் 100-க்கு | ... | ... | 2 | 8 | 0 |
| 3-வது நெம்பர் 100-க்கு | .. | ... | 0 | 6 | 0 |

## குழந்தைகள்!

குழந்தைகள் விளையாடக்கூடிய பித்தளை வெண்கலத்தால் செய்த செம்பு, குடம் கரண்டிமுதல் 32 சாமான்கள் அடங்கிய அழகும் நேர்த்தியும் மைசும் பளபளப்புமுள்ள அழகிய பாத்திரங்கள் 32 உள்ள சிறுசெட்டு 1-க்கு ரூபா 2, பெரிய செட்டு 1-க்கு ரூபா 4.

உடனே எழுதுங்கள்,

விலாசம்: மானேஜர்,

## பட்டு பீதாம்பர கம்பெனி,

காசி, **Benares City.**